**தம்புள்ள மாநகர சபை**
**மாத்தளை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையினால் பின்பற்றப்படுகின்ற இருப்பு மீள்மதிபீடு அடிப்படை கணக்குகளுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வளவு செய்யப்பட்டிருந்த ரூபா 296,644 பெறுமதியான 12 நிலையான சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாநகர ஆயுர்வேத திணைக்களத்தில் ரூபா 263,054 பெறுமதியான மருந்துகள் மீதி, இருப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கை உழவு இயந்தரமொன்றின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 33,735 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(உ) பொது நூலகத்திற்கு டைம் சஞ்சிகை கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 13,608 தொகை முற்பணக் கொடுப்பனவாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாநகர சபையை ஸ்தாபித்த போது சொத்துக்கள் பொறுப்பக்கள் கையளித்தல் தொடர்பான குழு அறிக்கையின் பிரகாரம், தம்புள்ள பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,870,766 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில்

தம்புள்ள பிரதேச சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 2,486,917 என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அத் தவறினை மீளாய்வாண்டின் போதும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 1,049,100 கூட்டுத்தொகையான 2 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பிடும் போது அவதானிக்கப்பட்ட வேறுபாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 107,350 ஆக இருந்தது.

### 1.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2013 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 1,079,440 தொகையான 25 நிர்மாண கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,563,391 தொகையான 34 நிர்மாண கடன்கொடுத்தோர் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 19,462,096 ஆன 04 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

கீழே விபரிக்கப்பட்டுள்ள இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 40(1)(ஊ) மற்றும் 40(ஆ) 01 ஆம் பிரிவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2012 திசெம்பர் 06 ஆந் திகதிய 7.2 ஆம் இலக்க பொதுச்சபை தீர்மானத்தின் அடிப்படையில் தம்புள்ள பேரூந்து நிலையத்தின் ஒரு பகுதி நபரொருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி 570, 571 | 02 வருடங்களை கடந்த ரூபா 40,000 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | நகர சபைக்குச் சொந்தமான 24 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 மற்றும் 2 ஆம் பந்திகள் | அரச நிறுவனங்களிடமுள்ள உடைந்த கைதவிர்க்கப்பட வேண்டுமென இனங் காணப்பட்ட வாகனங்களை சுற்றறிக்கை திகதி முதல் 3 மாதங்களுக்குள் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த ஜீப் வண்டியை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 2015/08 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | அரசின் பல்வேறு திணைக்களங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 773,350 நிலுவை வீதவரி மீதியை அறவிடுவதற்காக மாவட்ட கூட்டிணைப்பு குழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.6 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.3 ஆம் பந்தியின் பிரகாரம், ஒப்பந்தமொன்றின் மேலதிக வேலை, மதிப்பீட்டுத் தொகையில் 10% சதவீதத்தை விஞ்சியிருந்தால் அதற்கு உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், தம்புள்ள பேரூந்து தரிப்பு நிலையத்தின் சினிமா கொட்டகை நிர்மாணத்தின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 10.77% ஆன ரூபா 3,127,104 மேலதிக வேலைக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தம்புள்ள பேரூந்து தரிப்பு நிலையத்தின் செயற்திட்டத்தின் பெறுமதி 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி நடைபெற்ற 12.03.03 ஆம் இலக்க பொதுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் சபையின் பெறுமதி ரூபா 27,005,397 என அங்கீகரிக்கப்பட்டிருக்கையில் மதிப்பீட்டு விலையான ரூபா 29,208,526 பெறுமதி அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 2,023,128 தொகை கூடுதலான பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 124,471,849 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,141,737 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 119,330,112 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரி

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 5,550,674 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வீதவரி மீதி ரூபா 3,713,454 ஆக இருந்தது. அப்பெறுமானத்தில் மீளாய்வாண்டிறகாக 53% ஆன ரூபா 1,978,656 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் வீதவரி அறவீட்டில் பலவீனமான செயல்முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நிலுவை வீதவரி மீதியினுள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 5,550,674 ஆன மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 230(1) ஆம் பிரிவின் பிரகாரம், நகரத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு வகைக்கும் உரிய வீடுகள், கட்டிடங்கள், காணி போன்றவற்றின் வருடாந்த பெறுமதி அடிப்படையில் வீதவரி அறவிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தம்புள்ள நகரத்துக்குரிய கிராம சேவையாளர் பிரிவின் சில கிராமங்கள் தவிர ஏனைய கிராமங்களிலிருந்தும் 13 கிராம சேவை பிரிவுகளின் 12 பிரிவுகளிலிருந்தும் வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 237(1) ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த பெறுமதிக்கு தாக்கமளிக்கும் வகையில் ஆதனங்களின் பௌதீக ரீதியில் மாற்றங்கள் செய்யப்பட்ட 68 வியாபார நிலையங்களுக்குரிய புதிய மதிப்பீடு அல்லது தற்காலிகமாக மதிப்பீடு மேற்கொள்ளப்படாத காரணத்தினால் வீதவரி வருமானம் சபையால் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) புதிய நிர்மாணங்களுக்காக வழங்கப்பட்ட 72 இணக்கச் சான்றிதழ்களுக்குரிய தற்காலிக மதிப்பீட்டு அடிப்படையில் வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாநகர சபையால் 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட 385 திட்டங்களுக்காக இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வீதவரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 வாடகை

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 33,746,665 தொகையான நிலுவை வாடகையில் ரூபா 7,156,679 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிலுவையில் 21% சதவீதமான பெறுமதியொன்றாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட ரூபா 6,758,379 தொகையான குத்தகை வாடகை பெறுமதியில் ஆண்டில் ரூபா 5,205,346 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவை வாடகை ரூபா 16,416,474 ஆக இருந்தது.

(இ) பஸ் நிலையத்தின் கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது மீளச் செலுத்தப்படாத கேள்வி கட்டணங்களாக செலுத்த வேண்டிய தொகையில் மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 11,627,460 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது 5 வருடங்களுக்கு ஒருமுறை குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

---

மீளாய்வாண்டிற்குரிய ரூா 1,245,900 ஆன நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

---

மத்திய மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிடியாணைக் கட்டணங்களாகவும் நீதிமன்றத் தண்டப்பணமாகவும் ரூபா 1,274,165 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையின் பதவியணியினரில் 55 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) மாநகர சபைக்கு ஏனைய நிறுவனங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த 3 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கை உழவு இயந்திரத்தை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

மாநகர சபையிடமிருந்து 2 வாகனங்கள் 1 ஆண்டு முதல் 4 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்று காணப்பட்டன.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

வாகன அனுமதிப்பத்திரங்கள் உரிய காலத்தில் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த காரணத்தினால் வருமான அனுமதிப்பத்திர தண்டப்பணமாக ரூபா 17,135 மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் வகைப்படுத்தப்படாமல் 15 மெற்றிக் தொன் அளவில் சபையின் உழவு இயந்திரங்கள் மற்றும் டிபர் வண்டி என்பவற்றைப் பயன்படுத்தி திகம்பதஹ பிரதேசத்தில் அரசாங்கக் காணியில் இடப்பட்டு வந்தன.

(ஆ) மாநகர சபையால் கழிவுப்பொருட்களை வெளியேற்றும் காணி பாதுகாப்பான வேலியொன்று இடப்பட்டு எல்லைப்படுத்தப்படாதிருந்ததுடன் பிரதேசத்தில் ஏனைய நிறுவனங்களினாலும் அவ்விடத்தில் அனுமதியின்றி கழிவுகள் இடப்பட்டு வந்தன.

(இ) கழிவுப்பொருட்களை இடும் காணியின் பிரதேசமொன்றுக்கு மாத்திரம் அல்லாது வீதியின் இரண்டு பக்கத்திலும் கழிவுப்பொருட்கள் இடப்பட்டிருந்ததுடன் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக நகர சபையால் 2016 ஆம் ஆண்டில் ரூபா 5,044,790 செலவிடப்பட்டிருந்த போதிலும், நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் உக்கக்கூடிய மற்றும் உக்காத பொருட்களாக வேறாக்கப்பட்டு கழிவுகள் மீள்சுழற்சி வேலைத்திட்டத்திற்காக தொடர்புபடுத்துவதற்காக சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக உரிய இடமொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 3.5 சுற்றாடல் சிக்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தம்புள்ள நகர சபையால் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் மீள்சுழற்சிப்படுத்தலுக்கான வேலைத்திட்டமொன்று காணப்படாமை மற்றும் முறையற்ற விதத்தில் கழிவுப்பொருட்கள் இடப்படுவதன் காரணமாக சூழல் பிரச்சினைகள், பொது சுகாதார சிக்கல்கள் தோன்றுவதும் காட்டு யானைகள், மாடுகள் மற்றும் ஏனைய மிருகங்கள் இக்கழிவுப்பொருட்களை உணவாக கொள்வதாலும் சுற்றாடல் பிரச்சினைகள் உருவாகியிருந்தன.

(ஆ) சபைக்குரிய களியியால் கொண்டு வரப்படுகின்ற கழிவுப்பொருட்கள் முறையான நடைமுறையொன்றின் பிரகாரம் வெளியேற்றப்படாதிருந்ததுடன், திகம்பதஹ அரச காணியில் குழிகள் தோண்டி இடப்படுவதால் சூழல் அசுத்தமடைந்து காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(ஆ) 46 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 28,072,400 ஆன கூட்டுப்பெறுமதியான நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) 15 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,935,000 தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) 89 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளில் 13% முதல் 99% வரையான வீச்சில் விலகல் காணப்பட்டதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்ததுடன், இதற்காக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தார்.

(ஆ) நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் கூட்டப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வாகன நிர்வாகம்
(ஆ) பதவியணியினர் நிர்வாகம்
(இ) வருமான நிர்வாகம்